RS Polyclinic
OUR EXPERIENCED DOCTORS
Dr M. Rajkumar
MBBS MS DNB MCh (Vascular)
98410 25996
Sr Vascular Surgeon
Dr K. Namitha Bhuvaneswari
MBBS DOMS DO MS
9444 268784
Sr Eye Surgeon
Dr Sathish Rajkumar
MBBS MS FMAS
9445 40179 3
Laparoscopic & Laser Surgeon
Dr Shanthi R.
MBBS MS (Vascular)
9884 65094 5
Sr Vascular Surgeon
Dr Salma R
MBBS MD
97780 9774 2
General Physician
Dr Praveena E
MBBS MS (ENT)
9944 10044 3
Sr ENT Surgeon

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurali@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
வீடார் ரெயின் போ சர்வீசஸ்
8148231942 / 8144337349
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

தொகுதி - 6 | நாளிதழ் | 8 பக்கங்கள் சென்னை, 18 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 129

மலேரியாவை ஒழிக்க கூட்டு முயற்சி அவசியம்: குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு



சென்னை – 18 நவம்பர், 2026

புதுதில்லியில் இந்திய மருத்துவ ஆராய்ச்சி குழுமம் (ஐசிஎம்ஆர்) – தேசிய மலேரியா ஆராய்ச்சி நிறுவனத்தின் ஓராண்டுகால பொன்விழா கொண்டாட்டங்களை குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு இன்று (2026 நவம்பர் 17) தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்தியா உள்ளிட்ட உலகின் பல்வேறு நாடுகளில் மலேரியா நீண்டகாலமாக தீவிர பொது சுகாதார சவாலாக உள்ளது என்று தெரிவித்தார். சுதந்திரம் பெற்ற காலகட்டத்தில் இது நமது நாட்டின் மிக முக்கிய பொது சுகாதாரப் பிரச்சினையாக இருந்தது என்று கூறினார். கடந்த சில ஆண்டுகளாக மலேரியா தடுப்புப் பணிகளில் இந்தியா பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளது மகிழ்ச்சிக்குரிய அம்சம் என்று தெரிவித்தார்.

மேம்படுத்தப்பட்ட சுகாதார சேவைகள், நவீன நோய் கண்டறிதல் தொழில்நுட்பங்கள், திறன்மிக்க மருந்துகள், கொசு ஒழிப்பு இயக்கங்கள், சமூக பங்களிப்பு ஆகியவை இந்நோய் பரவலை கட்டுப்படுத்துவதில் முக்கியப் பங்காற்றியுள்ளதாக கூறினார். மலேரியாவை ஒழிப்பதற்கான பணிகளில் இந்தியா அடைந்துள்ள முன்னேற்றம் உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மலேரியாவுக்கு எதிராக நீண்டகால போராட்டத்தில் தேசிய மலேரியா ஆராய்ச்சி நிறுவனம் மிக முக்கிய பங்காற்றியுள்ளதாக அவர் கூறினார். கடந்த 50 ஆண்டுகளாக மலேரியா ஒட்டுண்ணிகள், கொசுக்கள், நோய் பரவலை கட்டுப்படுத்துதல், சமூகம் சார்ந்த கண்காணிப்பு ஆகியவற்றில் இந்நிறுவனம் முன்னணி ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.